# <u>விதிகள் மற்றும் அறிவிக்கைகள்</u>

**அடிப்படை சட்டக்கூறும் அதன் கோட்பாடும் -** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுக் கூறு 320 (3) (அ) & (ஆ) இன்படி அரசுப் பணியிடங்களில் பணியாளர்கள் பணியமர்த்தும் முறை, பணியமர்த்தல், பதவி உயர்வு, பணி மாறுதல் ஆகிய இனங்களில் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை கொள்கைகள் தொடர்பாக தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

**I.**

- அரசுத் துறையில் உள்ள பல்வேறு பதவிகளுக்கான விதிகளை உருவாக்குவதற்கும், திருத்தங்கள் மேற்கொள்வதற்குமான அரசின் கருத்துருக்களை ஆய்வு செய்தல்.
- பெறப்பட்ட கருத்துருவின் மீது தேர்வாணையத்தின் கருத்தினைப் பெற்று அரசுக்கு தெரிவித்தல்.
- தேர்வாணையக் கருத்திற்கு மாறுபாடுகள் ஏதும் இருந்தால் ஆண்டு அறிக்கையில் அதை தெரிவித்தல்.
- தேவையான நேர்வுகளில் விதிகளில் திருத்தம் செய்ய அரசுத் துறைகளுக்கு பரிந்துரைத்தல்.

**II.**

- திட்ட அட்டவணைப்படி காலிப் பணியிட மதிப்பீடுகள் பெறப்படுதலைக் கவனித்தல்.
- பெறப்பட்ட காலிப் பணியிட மதிப்பீட்டறிக்கையின் மீது அப்பதவிக்கான விதிமுறைகளின் அடிப்படையில் அறிவிக்கை தயாரித்தல்.
- குறைபாடுகள் ஏதும் இருப்பின், அது தொடர்பாக அரசு மற்றும் துறைத் தலைவர்களிடம் தகவல் கோருதல்.
- தேர்வாணைய ஆணைக்குப் பின் நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை / விளம்பரங்கள் வெளியிடுதல்.
- செயல்முறைத் திட்டத்திற்கான அரசாணை, பாடத்திட்டம் மற்றும் மருத்துவ உடற்தகுதி குறித்த சான்றிதழ் பெறுவதற்கான அரசாணைகளுக்கு திருத்தங்கள் வெளியிட நடவடிக்கை எடுத்தல்.

**III.**

- பல்வேறு பதவிகளுக்கான பாடத்திட்டங்கள் தயாரித்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.
- இணைக்கல்வித் தகுதிக்கான குறிப்புகள் தயாரித்தல், குழுவை கூட்டுதல் குழுவின் அறிக்கையை அரசிற்கு அனுப்புதல் அரசாணை வெளியிடுவதை கவனித்தல்.
- பல்வேறு பதவிகளுக்கான தெரிவு திட்ட முறைகளுக்கு தேவைக்கேற்ப திருத்தங்கள் மேற்கொள்ளுதல்.